# ஸ்ரீ நரசிம்மரைப் போற்றும் தமிழ் உருப்படிகள்

**ரா.பரிமளா**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி
திருவையாறு

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** II
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

வேதக் கடலுள் ஆழ்ந்து கிடக்கின்ற மந்திர ரத்தினார்த்த விசேஷங்களை தங்கள் திவ்விய ஞானத்தினால் மூழ்கி எடுத்து உலகிற்கு அறிமுகபடுத்தியவர்கள் ஆழ்வார்களும், நாயன்மார்களும் ஆவர். இவர்களில் வைணவப் பெரியோர்களான ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர். வைணவ சமயப் பாடல்களின் தொகுப்பே நாலாயிரத் திவ்யபிரபந்தம். நான்கு வேதத்தின் சாரத்தை திரட்டி ஆழ்வார்கள் திவ்யப்பிரபந்தமாய் அருளினர். இந்த பிரபந்தம் தமிழ் வேதம் திராவிட வேத சாகரம் என்றும் அழைக்கப்படுகின்றன. நாலாயிரத் திவ்யப்பிரபந்தம், பாபநாசம் சிவன், பத்மா வீரராகவன், கோட்டீஸ்வர அய்யர், சுத்தானந்த பாரதி போன்றோர் தமிழில் நரசிம்மரைப் பற்றி இயற்றியுள்ள உருப்படிகளையும் இங்குக் குறிப்பிட்டுள்ளேன்.

### ஸ்ரீ நரஸிம்மர் அவதார மகிமைகள்

விஷ்ணு எடுத்த அவதாரங்களில் ஒன்றான நான்காவது அவதாரமான ஸ்ரீநரஸிம்மர் க்ருதாயுகத்தில் வைகாசி மாத ஸ்வாதி நட்சத்திரத்தில் கொடிய இரண்ய கசிபுவின் குமாரனான பிரஹ்லாதனுக்காக அவதாரம் கொண்டு சுத்த சதுர்த்தசி சனிவார சந்தியா காலத்தில் சங்கு சக்ரம் அல்லாத தன் கூரிய நகங்களால் வாயிற்படியில் வைத்து இரண்யகசிபுவை மாய்த்து, இன்றளவும் தூய சக்திகளை அழிக்கவல்ல கடவுளாக விளங்குகிறார்.

### ஸ்ரீ நரசிம்மரைப் போற்றும் பாசுரங்கள்

ஆழ்வார்களில் பொய்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் போன்றோர் ஸ்ரீ நரசிம்ம மூர்த்தியைப் போற்றிப் பாடியுள்ளார்கள்.

### பொய்கையாழ்வார்(முதல் திருவந்தாதி)

அடியும்படிகடப்பத் தோள் திசை மேல் செல்ல,
முடியும் விசும்பளந்த தென்பர்-வடியுகிரால்
ஈர்ந்தான் இரணியன் தாகம், இருஞ்சிறைப்புள்
ஊர்ந்தா நுலகளந்த நான்று.

பொருள்: தன் கூரிய நகத்தால் இரணியன் மார்பைப் பிளந்த, கருட வாகனப் பெருமான்,உலகத்தை அளந்த பொழுது அவன் திருவடிகள் பூமியை அளந்தன, அவன் திருவடி வானை அளந்தது என்று பெரியோர் கூறுவர். நான் இதனைக் கேட்டார் வாய் கேட்டேன், என் தலையிலே அவன் திருவடி வைக்கப் பெறவில்லையே! என்கிறார் பொய்கையாழ்வார்.

**பூதத்தாழ்வார் (இரண்டாம் திருவந்தாதி)**

**கொண்ட துலகம் குறளுருவாய்க் கோளரியாய்,**
**ஒண்டிறலோன் மார்வத் துகிர்வைத்தது,-உண்டதுவும்**
**தான் கடந்த ஏழுலகே தாமரைக்கண் மாலொருநாள்,**
**வான்கடந்தான் செய்த வழக்கு.**

பொருள்: வாமனப்பிரான் உலகங்களை அளந்து தனதாக்கிக் கொண்டான் நரசிம்மப் பெருமான் இரணியன் மார்பில் நகத்தால் கீறி அடித்தான். பண்டு திருமால் உலகங்களை உண்டு காத்தான் செந்தாமரைக் கண்களுடைய திருமால் செயல்கள் வானைவிடவும் பெரிதானவை. மிகவும் நியாயம் ஆனவை.

**பேயாழ்வார் (மூன்றாம் திருவந்தாதி)**

**அங்கற்கு இடர் இன்றி அந்திப் பொழுதத்து**
**மங்க இரணியனது ஆகத்தை – பொங்கி**
**அரி உருவமாய்ப் பிளந்த அம்மான் அவனே**
**கரி உருவம் கொம்பு ஓசித்தான் - காய்ந்து.**

பேயாழ்வார் தனது மூன்றாம் திருவந்தாதியில் பாற்கடலில் பள்ளிகொண்டுள்ள ஆதிசேஷனைப் பற்றியும், அவன் கோயில் கொண்டுள்ள திருத்தலங்களையும் குறிப்பிட்டு,இரணியன் மார்பை பிளக்கவே எம்பெருமான் நரசிம்மம் ஆனார். திருமால் மாலை நேரத்தில் நரசிம்ம வடிவம் கொண்டு, பிள்ளையான பிரகலாதனின் துன்பம் தீர்ப்பதற்காக இரணியனின் மார்பைப் பிளந்து கொன்றான். மாலை நேரத்தில், நரசிம்மமாய்த் தோன்றிய திருமால், தன்னை இகழ்ந்த இரணியனின் உடலைப் பல கூறுகளாக வகிர்ந்து சிந்தும்படி பிளந்தான்.

**திருமழிசையாழ்வார்**

**மாறாய தானவனை வள்ளுகிரால், மார்விரண்டு**
**கூறாகக் கீறிய கோளரியை,-வேறாக**
**ஏத்தி யிருப்பாரை வெல்லுமே, மற்றவரைச்**
**சார்த்தி யிருப்பார் தவம்.**

திருமழிசையாழ்வார் தன்னுடைய பாசுரத்தில் குறிக்கும்போது நரசிம்மனை போற்றுபவரே வெற்றி பெறுவர் என்று போற்றுகிறார். மிடுக்குடைய நரசிம்மபிரான், தன்னை எதிர்த்த இரணியன் மார்பைக் கூரிய நகங்களால் இரு பிளவாக்கி கொன்றான். இப்பெருமானைத் துதிக்கும் அடியார்களுக்கு ஆட்படும் அடியார்களின் புண்ணியம் மேலோங்கி வென்றுவிடும். எனவே நரசிம்ம மூர்த்தியை துதியுங்கள் என்கிறார்.

**நம்மாழ்வார்**

இவர் ஸ்ரீ நரசிம்மரைப் போற்றி திருவாய்மொழியில் ஸ்ரீ நரசிம்ம மூர்த்தி அவதாரத்தினைப் பாசுரங்களில் பாடியுள்ளார். நரசிம்மனாய் இரணியனைக் கொன்ற சக்கரக்கையன் திருமாலைக் குருகூர்ச் சடகோபர் ஆயிரம் பாசுரங்களில் பாடியுள்ளார்.

**எங்கும் உளன் கண்ணன் என்றமக னைக்காய்ந்து,**
**இங்கில்லை யால் ஆஎன் றிரணியன் தூண்புடைப்ப,**
**அங்கப் பொழுதே அவன்வீயத் தோன்றிய, என்**
**சிங்கப் பிரான்பெருமை யாராயும் சீர்மைத்தே?**

**பெரியாழ்வார்**

பெரியாழ்வார் தன் திருமொழியில் இரணியன் வதத்தினை பல பாடல்களில் பாடியுள்ளார். மேலும் தனது பிள்ளைத் தமிழில் செங்கீரை, சப்பாணிப் பருவங்களில் ஸ்ரீ நரசிம்ம அவதாரத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

**அளந்திட்ட தூணையவன் தட்ட, ஆங்கே**
**வளர்ந்திட்டு வாளுகிர்சிங்க வுருவாய்**
**உளந்தொட்டு இரணியனொண்மார் வகலம்**
**பிளந்திட்ட கைகளால் சப்பாணி,**
**பேய்முலையுண்டானே!சப்பாணி.**

**ஆண்டாள்**

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாகிய ஆண்டாள் இயற்றிய மார்கழி நோன்பு என்ற தலைப்பில் திருப்பாவையில் சிங்க அவதாரம் எடுத்த திருமாலை வீறு கொண்ட சிங்கமாகப் போற்றி வர்ணிக்கிறாள்.

**நாளை வதுவை – மணம் என்று நாள் இட்டு**
**பாளை கமுகு பரிசுடைப் பந்தல் கீழ்**
**கோளரீ மாதவன் கோவிந்தன் என்பான் ஓர்**
**காளை புகுதக் கனாக் கண்டேன், தோழீ! நான்.**

**திருப்பாணாழ்வார் (அமலனாதிபிரான்)**

**பரியனாகி வந்த அவுணனுடல் கீண்ட,** அமரர்க்கு
**அரிய ஆதிபிரானரங்கத் தமலன் முகத்து**
**கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து**
**செவ்வரியோடி, நீண்டவப்**
**பெரியவாய கண்களென்னைப் பேதமை செய்தனவே!**

**பாபநாசம் சிவன்**

தஞ்சை மாவட்டத்தில், நன்னிலம் தாலுக்காவில், போலகம் என்ற கிராமத்தில் இராமாம்ருதய்யருக்கும், யோகாம்பாளுக்கும் 2வது பிள்ளையாக கி.பி.1890-ஆம் ஆண்டு பிறந்தார். “தமிழ் தியாகைய்யா” என்று இசை அன்பர்களால் போற்றப்பட்டவரும், இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த வாக்கேயகாரரானபாபநாசம் சிவன் அவர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கீர்த்தனங்களை இயற்றியுள்ளார். இவர் ஸ்ரீ நரசிம்மரைப் போற்றிப் பாடல் பாடியுள்ளார்.

இராகம்: மோஹனம் தாளம்: ஆதி

**பல்லவி**

நாராயண திவ்ய நாமம் நான் மறை சொல்லும்
நாயகன் திரு நாமம் -- பாவிற் கினிய (நாராயண)

**அநுபல்லவி**

ஆராவமுதாய் ஆறு வயதிலே
அன்பு செய்தருவன் உணர்ந்த மந்திரம்

**சரணம்**

நாரதாதி முனிவரும் ஸனகாதி யோகியரும் ப்ரஹ்லாதனும் --
எந்நாளும் மனோலயமுற வாயார பூஜிக்கும்

**கோடீஸ்வரய்யர்**

தமிழ் கீர்த்தனையில் சிறந்த வாக்கேயக்காரர்களில் ஒருவரான கோடீஸ்வர ஐயர் மதுரை அருகே நந்தனூர் என்னும் கிராமத்தில் சிவகங்கை சம்ஸ்தான சங்கீத வித்வானான நாகரத்தினம் ஐயருக்கு மகனாக 1869ஆம் ஆண்டு பிறந்தார். தன் குல தெய்வமான முருகனிடம் மிகுந்த பக்தி கொண்டவர்.

இராகம் : ஜாலவராளி தாளம் : கண்டசாபு

**பல்லவி**

அனாதரட்சக குஹ அரசே நீ வருக மிக
அனாதஏற்கு முருக நின் அருள் பெறுக

**அனுபல்லவி**

மனாதீத மதிவதனா வாரி ஜதளந
யனா ஞான முதவசனாஎனாறவிலும் (அனாதரட்சக)

**சரணம்**

நராளி வெருவிய ஆயிராளி முகன் உயிர் உண்
சராளி யாம் சரவணபவசரபமே ஸ்வரஜால
வராளி மருவும் குழல் வள்ளி மணவாளா குரு
பராசுப கரகவி குஞ்சர தாஸன் எனை ஆள (அனாதரட்சக)

**சுத்தானந்த பாரதியார்**

கவியோகி சுத்தானந்த பாரதியார் பாடிய இசைப் பாடல்கள் 5000 உண்டு. எக்காலத்திலும் ஒளிரும் உத்தமமான அந்த இலக்கியங்களை இசை நயத்துடனும், இராக தாளங்களுடனும் சாமானியர்களும் புரிந்து கொள்ளும் வண்ணம் கவியோகி தமிழில் பாடியிருப்புது வியக்கத்தக்கதாகும்.

இராகம்: சைந்தவி தாளம்: ஆதி

ப: சிங்கம் இருக்கிறான் -- அஞ்சாதே – நர
சிங்கம் இருக்கிறான் -- மனமே (சிங்க)
அ: தங்கத்தணல் போலே சத்திய ஜோதியாய்
தாசரை வருத்திடும் நீசரை யழித்திடச் (சிங்க)
ச: பாத்திர மாகிய பக்தப்ரஹலாதனை
பகைத்துத் தொகைத்துமிகப் பங்கப் படுத்திய
நாத்திகக் கனகனை ஆத்திரந் தீரவே
நகத்தால் பிளந்த விஷ்ணு நாராயணன் வீரச் (சிங்க)

**திருமதி.பத்மா வீரராகவன் இயற்றிய பாடல்கள்**

கைங்கர்யஸ்ரீ, இன்னிசைமாமணி, திவ்யகாண ப்ரவீண திருமதி. புத்மாவீரராகவன். இவர் திருமதி. காயத்ரி வெங்கட்ராகவன் என்பவருடைய குரு ஆவார். இவர் இயற்றிய "ஒப்பிலியப்பன் மலர்கள்" என்ற புத்தகத்தில் மேள இராகப் பாடல்கள் ஒவ்வொன்றும் விரிவாக கொடுக்கப்பட்டுள்ளது. இவர் நரசிம்மர் மீது இரண்டு பாடல்கள் பாடியுள்ளார்.

இராகம் : அடாணா தாளம்: ஆதி

**பல்லவி**

ப்ரகலாதனைக் காக்க எரிதழலாய்த் தூண் பிளந்து
அரி உருவாய் வந்த அஹோபில வரதனே! (ப்ரகலாதனை)

**அனுபல்லவி**

கருணையும் கோபமும் கண்களில் இருந்தாலும்
அரவணைக்கும் நெஞ்சம் அடியவரைத்தாங்கும் (ப்ரகலாதனை)

**சரணம்**

திருமகள் செஞ்சு லட்சுமியை மணந்த வேடுவனே!
நீராகி பாபநாசினியில் பாவம் போக்கும் நாதனே!
தருமம்,பித்ருகா்மம், அருந்தவப்பயன் எல்லாம்
பெருக்கியே நமைக்காக்கும் நவநரசிம்மனே! (ப்ரகலாதனை)

இவ்வாறாக தமிழ் இசை அறிஞா்கள் பலா் நரசிம்மரைப் போற்றி பாடியுள்ளாா்கள் அவற்றில் சிலவற்றை இந்த் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளேன்.